<u>**Sub Court, Eraniel**</u>

**O.S. No. 132 /2023**
**Date**: 21.01.2026.
வா.சா.2 - திரு. ஜெயசேகர்
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் தற்போது குன்னங்காட்டில் வசித்து வருகிறேன். நான் இன்று சாட்சியம் அளிக்கும் வழக்கின் 132/2023 ஆகும். வாதி கிருஷ்ணமணியை எனக்கு 5-6 வருடங்களாக தெரியும். இந்த வழக்கின் பிரதிவாதி ராஜேந்திரனை எனக்கு 2019 ல் இருந்து தெரியும். வாதி எனது உறவினர் அல்ல. வாதிக்காக நான் வேறு வழக்குகளில் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால், சரியல்ல. பிராமிசரி நோட்டில் நான் இரண்டு இடங்களில் கையொப்பம் செய்துள்ளேன். கையொப்பங்களை நான் 10.01.2022 ல் வாதியின் வீட்டில் வைத்து கையொப்பம் செய்தேன். பிராமிசரி நோட்டை ராஜேந்திரன் கைபட எழுதிக்கொண்டு வந்தார். பிராமிசரி நோட்டில் நானும், கியூபர்ட் ஜான் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். பிராமிசரி நோட்டில் கையொப்பம் செய்யும்போது மொத்தம் 6 பேர் இருந்தோம். கிருஷ்ணமணி, அவரது மனைவி, ராஜேந்திரன், ராஜீ, ராஜீயின் கணவர், கியூபர்ட் ஜான் மற்றும் நானும் இருந்தோம். பணத்தை என் முன்னிலையில் தான் கொடுத்தார்கள். 500 ரூபாய் நோட்டில் 10 கட்டு ராஜீ வாங்கினார், மற்றொரு 500 ரூபாய் நோட்டில் 10 கட்டு. பணத்தை நான் எண்ணி பார்க்கவில்லை. பிராமிசரி நோட்டில் வட்டியை பற்றி எழுதியிருந்ததா என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. நான் அந்த சமயத்தில் அங்கு இல்லை என்றாலும், வாதிக்கு ஆதரவாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.